# பத்தாண்டு கால புரட்சி

## நாம் தமிழர் கட்சி



### காலத்தின் தேவை

*“நான் இந்த கட்சியை ஆரம்பித்ததின் நோக்கம் அப்படியே இருக்கிறது. வழிவழியே வருகிற தமிழ் பிள்ளைகள் இந்த கட்சியின் தேவை கருதி இதை மீண்டும் கையிலெடுப்பார்கள்”*

- ***சி.பா.ஆதித்தனார்.***

**(1958ல் நாம் தமிழர் இயக்கத்தை துவங்கி பின்னர் செயல்பாட்டை நிறுத்திய போது ).**

தமிழகத்தில் இத்தனை கோடி தமிழர்கள் இருந்தும் 2009ல் சிங்களவர்கள் நடத்திய இன அழிப்பில் கொத்து கொத்தாக தமிழினம் செத்து விழுவதை எங்களால் தடுத்து நிறுத்த முடியாமல் போனது.

தமிழகத்தில் உள்ள தமிழர்களாகிய நாங்கள் திராவிட மற்றும் இந்திய தேசிய கட்சிகளின் சுரண்டல்களால் ஏற்கனவே உரிமைகள் பறிக்கப்பட்ட அடிமைகள் என்பதை உணர்ந்தோம்.

இனி நாம் சாதி மதம் கடந்து தமிழர்களாக ஒன்றிணைந்து நமக்கான தமிழ்தேசிய அரசியலை நிறுவினால் மட்டுமே நமது உரிமைகளை பெற்று வாழ முடியும் என்று உணர்ந்து நாம் தமிழர் இயக்கத்தையும் புலிக்கொடியையும் மீண்டும் கையிலெடுதார் சீமான். 2010 மே மாதம் 18ஆம் நாளில் நாம் தமிழர் இயக்கம் கட்சியாக உருவானது.



ஈழம் குறித்த சீமானின் பேச்சை ஒடுக்க 3 முறை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் இந்திய ஒன்றியமும் திமுக அரசும் அவரை கைது செய்தது. ஜல்லிக்கட்டை மீட்பதற்காக தமிழ்நாட்டில் தடையை மீறி ஜல்லிக்கட்டு நடத்தி புரட்சி செய்து கைதான ஒரே நபர் சீமான் தான்.

சீமானின் அறச்சீற்றம் ஒவ்வொரு முறையும் பல லட்சம் இளைஞர்களை சிறுக சிறுக அவர் பின்னால் சேர்த்துக்கொண்டேயிருந்தது... இருக்கிறது...

சமகாலத்தில் யாருடைய அரசியல் வாரிசுகளும் அல்லாமல் ஏற்கனவே ஆண்ட கட்சியின் நீட்சியாக அல்லாமல் யாருடைய ரசிகர் கூட்டமும் அல்லாமல் சாதிமத உணர்வால் ஒன்றிணையாமல் மக்களில் இருந்து வந்த சாதாரண இளைஞர்கள் நாங்கள் நாம் தமிழர் கட்சியாக ஓர் அசாதாரணமான அமைப்பாக இன்று உருமாறிக்கொண்டிருக்கிறோம்.

## செயல்பாடுகள்:

தமிழர்கள் இருக்கும் அத்தனை இடங்களிலும் நாம் தமிழர் கட்சி தனது கிளைகளை கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## கிளைகள்:

- குவைத்
- பிரான்சு
- தென்கொரியா
- சீனா
- டென்மார்க்
- கர்நாடகா
- டெல்லி
- சௌதி
- கத்தார்
- கனடா
- இங்கிலாந்து
- ஆஸ்திரேலியா
- ஸ்விசர்லாந்து
- ஜெர்மனி
- ஜப்பான்
- மலேசியா
- மும்பய்
- ஓமன்
- பஹ்ரெய்ன்
- அமெரிக்கா

# போராட்ட களத்தில்...



எப்படிப்பட்ட மாற்று அரசியலை மக்கள் விரும்பினார்களோ அது அத்தனையையும் நாம் தமிழர் கட்சி பத்து ஆண்டுகளாக நிரூபித்துக் காட்டி இருக்கிறது.

ஈழ விடுதலை தொடங்கி காவிரி நதிநீர் உரிமை, தமிழகமீனவர் உரிமை, முல்லைப் பெரியாறு அணை உரிமை, எழுவர் விடுதலை பிரச்சனை, விவசாய பிரச்சனை, கெயில் எரிவாயு பதிப்பு, மீத்தேன் ஈத்தேன் ஹைட்ரோ கார்பன் எடுக்கிற நாசகார திட்டங்கள், தூத்துக்குடி ஸ்டெர்லைட் பிரச்சனை, ஜல்லிக்கட்டு, தமிழர் மெய்யியல் அழிப்பு, நீட் தேர்வு, பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை, மது, சாதிய இழிவு உள்ளிட்ட தமிழர்கள் எதிர்கொள்ளும் அணைத்து சிக்கல்களையும் எதிர்த்து தொடர்ந்து தமிழினத்தின் நல்வாழ்விற்கான போராட்ட களத்தில் நின்று கொண்டிருக்கும் நாம் தமிழர் கட்சியின் பத்தாண்டு கால மாற்று அரசியல் பயணத்தில்...



*காவிரி போராட்டம்*




*எட்டுவழிச் சாலை போராட்டம்*

## ஜல்லிக்கட்டு போராட்டம்

ஜல்லிக்கட்டு போராட்டம் (2017) நடைபெறுவதற்கு முன்பே 2016ஆம் ஆண்டில் தடையை மீறி ஏறு தழுவுதலை நாம் தமிழர் கட்சி நடத்தியது.





## ஹைட்ரோகார்பன் போராட்டம்

தமிழகத்தின் டெல்டா விவசாயத்தை பாதிக்கும் விதமாக இருக்கும் ஹைட்ரோகார்பன் மீத்தேன் திட்டங்களை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை நாம் தமிழர் கட்சி முன்னெடுத்துள்ளது.

## காவிரி போராட்டம்

காவிரி நதிநீர் பங்கீட்டில் தமிழகத்தை வஞ்சிக்கும் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கோரியும் பல்வேறு போராட்டங்களை நாம் தமிழர் கட்சி முன்னெடுத்துள்ளது.







# மக்கள் சேவையில்...





தமிழகத்தின் மூலை முடுக்கெங்கிலும் நாம் தமிழர் கட்சியின் இருபதுக்கும் மேற்பட்ட பாசறைகள் வெவ்வேறு தளத்தில் மக்களுக்கான உரிமைகளை பேசிக்கொண்டிருக்கிறது. ஊழல் லஞ்சத்தில் திளைக்கும் இந்த திராவிட ஆட்சிக்கு எதிராக இந்தியாவிலேயே முதல்முதலாக நாம் தமிழர் கட்சி கையூட்டு ஊழல் ஒழிப்பு பாசறையை நிறுவி லஞ்சத்தை தடுத்து நிறுத்துவதோடு மட்டுமில்லாமல் ஏற்கனவே கொடுத்த லஞ்சப் பணத்தை மீட்டுத் தந்துள்ளது.







## “பண்பாட்டு புரட்சி இல்லாமல் அரசியல் புரட்சி வெல்லாது”

என்ற தத்துவத்தின் அடிப்படையில் பண்பாட்டு மீட்சி பாசறையான **“வீரத்தமிழர் முன்னனி”** ஆரம்பித்து, பன்னெடுங்காலமாக தமிழைப் புறக்கணித்து வந்த கோயிலில் சமஸ்கிருதத்தை வென்று தமிழை கோபுரம் ஏற்றியது நாம் தமிழர் கட்சி. திணை வழி கடவுள்களை ஒவ்வொன்றாக மீட்டு தமிழர் மெய்யியலை வென்றெடுக்கும் விதமாக முப்பாட்டன் முருகனின் தைபூச விழாவை அறுபடை வீடுகளிலும் கொண்டாட தொடங்கியது.

அழிந்துவரும் சுற்றுச்சூழலை பாதுகாக்க உலகமே கவலை கொண்டிருக்கும் போது அரசியல் கட்சிகள் வரலாற்றில் முதன் முறையாக **"சுற்றுச்சூழல் பாசறை"** என்கிற சூழலியல் அமைப்பை நிறுவி ஏரி குளங்களை தூர் வாருதல், மரம் நடுதல், பனை விதைகள் இலட்சக்கணக்கில் நடுதல், பள்ளிகள் தோறும் சென்று சூழலியல் விழிப்புணர்வு செய்தல் என சூழலியல் பணி செய்கிற ஒரே அரசியல் கட்சியாக விளங்குகிறது.





தமிழகமெங்கும் எந்த மருத்துவமனையில் குருதி தேவை என்று தெரிந்தாலும் நாம் தமிழர் கட்சியின் "**குருதிக்கொடை பாசறை**"யினர் குருதி வழங்கி அரசாங்கத்திடமே வாழ்த்துச் சான்றிதழும் பெறும் ஒரே அரசியல் கட்சியாக இருக்கிறது.

ஒக்கி புயல், தானே புயல், கஜா புயல் என பேரிடர்களில் பாதிக்கப் படும் போது நிவாரண உதவிகள் வழங்குவது மட்டுமல்லாது; மறுவாழ்வுக்கான சீரமைப்புப்ப பணிகளையும் மேற்கொள்ளும் "**பேரிடர் மீட்புப் பாசறை**". கொரோனா காலத்தில் ஏற்பட்ட முடக்கம் காரணமாக உணவின்றி தவித்த மக்களுக்கும், ஈழத்து உறவுகளுக்கும் நிவாரணங்கள் வழங்கியதோடு அல்லாமல் கேரள வெள்ளம், ஒடிசா புயல் பாதித்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கியுள்ளது.

மாணவர்களின் பிரச்சினைக்காக போராடுவதற்கு "**மாணவர் பாசறை**".

பெண்கள் உரிமையை மீட்க "**மகளிர் பாசறை**"

வேளாண் பெருங்குடி மக்களின் உரிமையை பேச "**உழவர் பாசறை**".

தொழிலாளர் நலன் காக்க "**தொழிலாளர் பாசறை**".

தமிழ்மொழியை மீட்க "**தமிழ் மீட்சி பாசறை**".

தனக்கென ஊடகமே இல்லாத ஒரு கட்சி இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைக்கிற அதிசயத்தை நிகழ்த்தும் சமூக ஊடக வலிமையை கொண்ட "**இணையதள பாசறை**"

தகவல் தொழில்நுட்பத் பணியாளர்கள் சிக்கல்களை பேச "**தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறை**".

விளையாட்டுத்துறையில் மாணவர்களை வார்த்தெடுக்கும் "**விளையாட்டு பாசறை**"

என பன்முக தளத்தில் தமிழ் இனத்தின் மீட்சிக்காக அறிவார்ந்த திட்டத்தோடு உழைக்கும் தனித்துவமிக்க பேராற்றல் நாம் தமிழர் கட்சி..




## சுற்றுச்சூழல் பாசறை

“பத்தாண்டு பசுமை திட்டம் பல கோடி பனைத்திட்டம்” என்ற திட்டத்தை முன்வைத்து தமிழகத்தின் பல இடங்களில் பனைவிதைகளை விதைத்து வருகிறது நாம் தமிழர் கட்சியின் சுற்றுச்சூழல் பாசறை.



## குருதிக்கொடை பாசறை

பல்வேறு முக்கியமான நேரங்களில் மருத்துவமனைகளில் குருதி தேவைப்படும் போது உடனே முன்வந்து சேவை செய்யும் குருதிக்கொடை பாசறை.



Ph- 99409 93488

## கையூட்டு ஊழல் ஒழிப்பு பாசறை

வெறும் பேச்சில் மட்டும் ஊழலை ஒழிப்போம் என்றில்லாமல் ஊழலை தடுப்பதற்கு தமிழகமெங்கும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தியும் இழந்த லஞ்சப்பணத்தை மீட்டு கொடுத்தும் வருகிறது கையூட்டு ஊழல் ஒழிப்பு பாசறை.

## தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறை

குடியுரிமை திருத்த சட்டம் அமலாவதற்கு முன்பே அந்த சட்டத்தின் பின்விளைவுகளை ஆராயும் விதமாக கருத்தரங்கம் நடத்தி பல்வேறு தீர்மானங்களை முன்மொழிந்தது நாம் தமிழர் கட்சியின் தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் பாசறை.



# தேர்தல் களத்தில்...








திராவிட கட்சிகளுடனும் தேசிய கட்சிகளுடனும் எந்த காலத்திலும் கூட்டணி இல்லை. ஊழல் லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்றால் முதலில் இந்த திராவிட கட்சிகளை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். 2016ல் புதிய அரசியல் வரலாறு படைப்போம் என்று முழங்கி 234 தொகுதியிலும் எந்த கட்சியுடன் கூட்டணி இல்லாமல், ஊடக வெளிச்சம் இல்லாமல், சாதிய மத அமைப்பு வாக்குகள் ஏதுமில்லாமல் வாக்குக்கு காசு கொடுக்காமல், சமூகநீதி, பெரியாரியம், அம்பேத்கரியம் என்று பேசுகிற கட்சிகளே சாதி பார்த்து வேட்பாளர்கள் நிறுத்துகிற போது, சாதி பார்த்து வேட்பாளர் நிறுத்தாமல்

**“நான் நிறுத்துகிற வேட்பாளரை தமிழனாகப் பார்த்தால் ஓட்டு செலுத்துங்கள், இல்லையென்றால் உங்களது ஓட்டு எங்களுக்கு தீட்டு”**



என்று பேரறிவிப்பு செய்து உண்மையான மாற்று அரசியலை இந்த மண்ணில் கட்டி எழுப்பினார் சீமான்.

கிரிமினல் குற்ற வழக்குகள் இல்லாத வேட்பாளர்களை நிறுத்திய ஒரே கட்சி என்கின்ற வரலாறையும் படைத்த நாம்தமிழர் கட்சி.

1.1% சதவீதம் வாக்குகளை பெற்று தமிழக அரசியலில் உண்மையும் நேர்மையுமாக கட்டியெழுப்பப்பட்ட மாற்று அரசியலின் தொடக்க ஆட்டத்தை தொடங்கியது. அதற்கடுத்து வந்த ஒவ்வொரு இடைத் தேர்தலிலும் யாரோடும் கூட்டணி சமரசம் இல்லாமல் தனித்து நின்று தேர்தலை எதிர்கொண்டது.

கருணாநிதியும் ஜெயலலிதாவும் உயிரோடு இருந்த காலகட்டத்திலேயே அவர்கள் இருவரையுமே சமமாக எதிர்த்து களத்தில் நின்றது. ஆர் கே நகர் இடைத் தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து தமிழக அரசியல் வரலாற்றிலேயே திருநங்கை ஒருவரை வேட்பாளராக நிறுத்தியது. மூன்றாம் பாலினத்தவர்களுக்கான அரசியல் என்பது அவர்களிடத்திலே அதிகாரத்தை கொடுப்பது மட்டும் தான் என்பதில் தெளிவாக இருந்தது. மிகப்பெரும் பண மழைக்கு நடுவில் இந்தத் தேர்தலில் கணிசமான வாக்கை பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்த நாம் தமிழர் கட்சி அரசியல் விமர்சகர்களின் பாராட்டை பெற்றது.

2019ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் யாருடனும் கூட்டணி இல்லாமல் களம் கண்டது நாம் தமிழர் கட்சி. தேசிய கட்சிகள் என்பது மாநிலங்களுக்கு தேவை இல்லாத ஒன்று அது மாநில உரிமைக்கு ஒருபோதும் துணையாக நிற்காது. இந்தியா முழுவதும் ஒற்றை கட்சி ஆட்சி முறை இருப்பது ஜனநாயக படுகொலைக்கு வழிவகுக்கும்.

**“அந்தந்த மண்ணை அந்தந்த மண்ணின் மைந்தர்களே ஆள்வோம். இந்தியாவை எல்லாரும் கூடி ஆள்வோம்”**

என்ற சீமானின் எளிய பேச்சு பாமர மக்களுக்கும் ஒற்றைக் கட்சி ஆட்சி முறையின் தீமையையும், கூட்டாட்சி தத்துவத்தின் வலிமையையும் உணர்த்தியது.


பெரியாரின் வழி வந்து பெண்ணுரிமை பேசுகிற கட்சிகள் கூட இதுவரை பெண்களுக்கு 50% தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கியது இல்லை. ஆனால்

**“பெண் விடுதலை இல்லையேல் மண் விடுதலை இல்லை”**

என்று முழங்கிய மேதகு பிரபாகரனை தலைவனாக ஏற்றுக் கொண்ட நாம்தமிழர்கட்சி ஆணுக்கு நிகராக பெண்களுக்கு 50% தேர்தலில் வேட்பாளராக வாய்ப்பு வழங்கி 2019 பாராளுமன்ற தேர்தலில் 20 இடங்களில்

ஆண்களை வேட்பாளராகவும் 20 இடங்களில் பெண்களை வேட்பாளராக நிறுத்தி உண்மையான பெண்ணிய உரிமையை பெற்றுத்தந்தது.




இந்த தேர்தலில் சுமார் 4 சதவீதம் வாக்குகளை பெற்று 2016 ல் 1.1 சதவீதத்தில் தங்களது தொடக்க ஆட்டத்தை துவங்கிய நாம் தமிழர் கட்சி மூன்று ஆண்டுகளில் நான்கு மடங்கு வளர்ச்சியை எட்டி இருந்தது.



தேர்தல் கள வேலையின் போது மற்ற கட்சிகள் எல்லாம் குவாட்டரும், கோழி பிரியாணியும், காசும் கொடுத்து களத்திற்கு ஆட்களை அழைத்து வருகிற சூழலில், தமிழ்நாட்டில் மட்டும் இல்லாமல் நாம் தமிழர் கட்சிக்கு வாக்கு சேகரிக்க அண்டை மாநிலத்தில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தன்னெழுச்சியாக இளைஞர்கள் வந்து தேர்தல் பணியாற்றுகின்ற சூழலை கண்டு எதிர்க்கட்சிகள் மிரண்டு போக செய்கிற சம்பவங்களை ஒவ்வொரு தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி படைத்துக் கொண்டிருக்கிறது

